## சின்ன சின்னதாய்



கோவை டாக்டர் என்.ஜி.பி. கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களுக்கான சிறப்பு உரையரங்கம் நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர் கவிஞர் சுடர்விழி உள்ளிட்டோர்.

### டாக்டர் என்.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரியில் இளங்கலை மாணவர்களுக்கான சிறப்பு உரையரங்கம்

**கோவை**

கோவை டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரியில், இளங்கலை மாணவர்களுக்கான உரையரங்க நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரி தமிழ் துறை உதவிப் பேராசிரியர் மூ.சிந்து வரவேற்றார். தமிழ் துறை தலைவர் நீ.குப்புசாமி வாழ்த்தினார். சிறப்பு விருந்தினராக வருங்கால வைப்பு நிதி மண்டல அலுவலக சமூகப் பாதுகாப்பு உதவியாளர் கவிஞர் சுடர்விழி கலந்துகொண்டார். அவருக்கு, தமிழ் துறை பேராசிரியர் கு.செல்வி நினைவுப் பரிசு வழங்கினார்.

பின்னர், 'வையத் தலைமை கொள்' என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினரான கவிஞர் சுடர்விழி பேசும்போது, "இன்றைய தலைமுறை மாணவர்கள் உயிருள்ள மனிதர்களுடன் தங்களுடைய நேரத்தை செலவழிக்காமல், உயிரற்ற இயந்திரங்களுடன் நேரத்தை செலவழித்தல்கூடாது. நவீனத் தொழில்நுட்பமும், அறிவியல் நுட்பமும் இளைய தலைமுறை மாணவர்களின் சிந்தனைத் திறனையும், தன்னம்பிக்கையையும் அழித்து விடுகிறது. பாரதி கண்ட தன்னம்பிக்கை சுடராக, இளைய தலைமுறையினர் வாழ வேண்டும். நல்ல புத்தகம் எப்படி புரட்சிக்கு வித்திடும் என்ற புத்தகம், படித்தலின் இன்றியமையாமையை உணர்த்துகிறது" என்றார்.

இந்நிகழ்வை மா.சம்பத்குமார், மூ.சிந்து ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர். தமிழ் துறை உதவிப் பேராசிரியர் மா.சம்பத்குமார் நன்றி கூறினார்.




கோவை காளப்பட்டி நேரு நகரிலுள்ள சுகுணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், மாணவர்களுக்கு பட்டம் வழங்கிய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் வி.கீதாலட்சுமி.

### சுகுணா கலை கல்லூரியில் பட்டமளிப்பு விழா

**கோவை**

கோவை காளப்பட்டி நேரு நகரிலுள்ள சுகுணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கடந்த 30-ம் தேதி பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

இதுகுறித்து அக்கல்வி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "விழாவுக்கு சுகுணா நிறுவனங்களின் தலைவர் வி.லட்சுமி நாராயணசாமி, தாளாளர் சுகுணாலட்சுமி ஆகியோர் தலைமை வகித்தனர். கல்லூரி முதல்வர் ராஜ்குமார் வரவேற்றார். சிறப்பு விருந்தினரான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வி.கீதாலட்சுமி, 120 பட்டதாரிகளுக்கு பட்டங்களை வழங்கினார். பின்னர் அவர் பேசும்போது, "பிற நாடுகள் அனைத்தும் இந்தியாவை திரும்பிப் பார்க்கும் அளவுக்கு, இளைஞர்களின் கல்வித் தரம் உயர்ந்துள்ளது. 'ஸ்வயம்' போன்ற மத்திய அரசு திட்டங்களும், 'நான் முதல்வன்', 'தமிழ்ப் புதல்வன்', 'புதுமைப்பெண்' உள்ளிட்ட கல்வித் தரத்தை உயர்த்தும் தமிழக அரசின் திட்டங்களும், இந்திய இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைகின்றன" என்றார். சுகுணா அறக்கட்டளை செயலர் டாக்டர் ஸ்ரீகாந்த் கண்ணன், கல்லூரி இயக்குநர் மற்றும் செயலர் டாக்டர் வி.சேகர் ஆகியோர் பட்டதாரிகளுக்கு வாழ்த்து தெரிவித்தனர். விழாவில், கல்லூரி துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்துகொண்டனர்" என்று குறிப்பிட்டுள்ளது.



பள்ளி மேலாண்மை குழு சார்பில், கோவை காளப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா அடையாள அட்டை மற்றும் பள்ளி பயன்பாட்டுக்கு புல் வெட்டும் இயந்திரம் வழங்கும் விழாவில் பங்கேற்றோர்.

### காளப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் புல் வெட்டும் இயந்திரம் வழங்கும் விழா

**கோவை**

பள்ளி மேலாண்மை குழு சார்பில், கோவை காளப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா அடையாள அட்டை, பள்ளி பயன்பாட்டுக்கு புல் வெட்டும் இயந்திரம் ஆகியவை வழங்கும் விழா நடைபெற்றது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "பள்ளி மேலாண்மை குழு சார்பாக நடைபெற்ற விழாவுக்கு, முன்னாள் மாணவி சுப்பு செந்தில்குமார் தலைமை வகித்தார். பள்ளி மேலாண்மை குழு தலைவர் வினிதா முன்னிலை வகித்தார். தலைமையாசிரியர் மாரிச்செல்வி வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் தலைவர் பாஸ்கர், அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசிய செயலாளர் பாரதி, மண்டலத் தலைவர் செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டு, மாணவ, மாணவிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினர். அதைத்தொடர்ந்து, பள்ளி வளாகத்தை பராமரிப்பதற்கு புல் வெட்டும் இயந்திரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், கிளப் பார்க் தலைவர் லோகநாதன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் மோகன் ரங்கநாதன், பள்ளி மேலாண்மை குழு ராஜகோபால் மற்றும் ஆசிரியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## பொள்ளாச்சியில் இருந்து கோவை செல்லும்

# ரயில் நேரம் மாற்றப்பட்டதை எதிர்த்து பயணிகள் போராட்டம்

**பொள்ளாச்சி**

பொள்ளாச்சியில் இருந்து கோவை செல்லும் பயணிகள் ரயிலின் நேரம் மாற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தண்டவாளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரயில் இன்ஜின் முன்பு பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கோவை செல்லும் ரயில் நேரம் மாற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பொள்ளாச்சி ரயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பயணிகள்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருந்து நாள்தோறும் கல்லூரி மற்றும் அலுவலக பணி நிமித்தமாக, ஏராளமானோர் கோவைக்கு சென்று வருகின்றனர். இவர்கள், தினமும் பொள்ளாச்சி ரயில் நிலையத்தில் இருந்து காலை 7.25-க்கு கோவைக்கு புறப்படும் ரயிலில் பயணம் செய்து வந்தனர். இந்நிலையில், பொள்ளாச்சியில் இருந்து கோவை செல்லும் பயணிகள் ரயிலின் (எண் -06420) நேரம் ஜனவரி 1-ம் தேதி முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாள்தோறும் காலை 7.25-க்கு மாறாக, காலை 8 மணிக்கு ரயில் புறப்படும் என்று, ரயில்வே நிர்வாகம் அறிவித்தது. கடந்த இரண்டு நாட்களாக பொள்ளாச்சியில் இருந்து 8 மணிக்கு ரயில் புறப்பட்டு சென்றது. இதனால், பணிக்கு செல்வோரும், கல்லூரி செல்லும் மாணவர்களும் கால தாமதமாக செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பொள்ளாச்சி ரயில் நிலைய அதிகாரியிடம் பயணிகள் நேற்று முறையிட்டனர். பின்னர், ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரயில் இன்ஜின் முன்பு நின்று, ரயில்வே நிர்வாகத்தை கண்டித்து பயணிகள் ரயில் நேரத்தை மாற்ற வேண்டாம் எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, ரயில்வே அதிகாரிகள் மற்றும் போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தி, மாற்று ஏற்பாடு செய்யப்படும் என தெரிவித்ததால் கலைந்து சென்றனர்.

## நகராட்சியாக தரம் உயர்ந்த கோத்தகிரி

**கோத்தகிரி**

கோத்தகிரி பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர், கூடலூர், நெல்லியாளம் ஆகிய 4 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், 35 ஊராட்சிகள் உள்ளன. உள்ளாட்சி அமைப்புகளை மறு வரையறை செய்யும் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில், தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் அருகில் உள்ள ஊராட்சிகளை இணைத்து விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகியவற்றுடன் இணைக்கப்பட உள்ள ஊராட்சிகளின் பரிந்துரை பட்டியல் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டது.

அதனடிப்படையில், 21 வார்டுகளுடன் 30.930 சதுர கிமீ பரப்பளவுடன் 28 ஆயிரத்து 207 மக்கள்தொகையுடன் உள்ள கோத்தகிரி பேரூராட்சியை, நகராட்சியாக தரம் உயர்த்துவது குறித்த அறிவிப்பு, பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றிருந்தது. இதை ஏற்று கோத்தகிரி பேரூராட்சியிலுள்ள கவுன்சிலர்களின் ஒருமித்த ஆதரவுடன் மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், கோத்தகிரியை நகராட்சியாக தரம் உயர்த்தி தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. சுற்றுலா முக்கியத்துவத்தின் அடிப்படையில், கோத்தகிரி பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட இந்த நகராட்சியின் வார்டு எண்ணிக்கை மறு நிர்ணயம், எல்லை வரையறைகள் செய்யப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, நீலகிரி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளின் எண்ணிக்கை 10-ஆக குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

## காட்டு யானை தாக்கி தொழிலாளி உயிரிழப்பு

**மேட்டுப்பாளையம்**

கோவை காரமடை ஒன்றியத்துக்கு உட்பட்ட நீலாம்பதி கிராமத்தில் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர்.

இக்கிராமம் மலைக்காட்டை ஒட்டியுள்ளதால், வன விலங்குகள் நடமாட்டமும் அதிகம் உள்ளது. இந்நிலையில், அப்பகுதியைச் சேர்ந்த பொன்னுசாமி(51) என்பவர் நேற்று காலை வனப் பகுதியை ஒட்டியுள்ள பகுதியில், கூலி வேலைக்காக சென்றுகொண்டிருந்தபோது, புதர் பகுதியில் மறைந்திருந்த ஒற்றை யானை அவரை துரத்தி தாக்கியது. இதில் பொன்னுசாமி உயிரிழந்தார். தகவல் அறிந்த பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகர் சரவணன் தலைமையிலான வனத்துறையினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரித்தனர். காரமடை போலீஸார் சென்று, சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

**ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்** (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்) பதிவு அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர்-641009.

**திருத்தம்**

31.12.2024 தேதியிட்ட இந்த நாளிதழில் வெளியான மின்-ஏல அறிவிப்பை பார்க்கவும். கடன்தாரர் தொடர்பானது : **B. ராமச்சந்திரன், த/பெ. பாலன்,** மின் ஏலம் நாள் "18.01.2025" தேதிக்கு பதிலாக **"03.02.2025"** என்று வாசிக்கவும். மற்ற விவரங்களில் எவ்வித மாற்றம் இல்லை.

இடம் : கிணதுகடவு
நாள் : 03.01.2025

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்காக

## தொண்டின் மூலம் அன்பையும், சமத்துவத்தையும் மண்ணில் செழிக்கச் செய்தவர் ராமானுஜர்

### 'எப்போ வருவாரோ' ஆன்மிக சொற்பொழிவில் பாரதிபாஸ்கர் புகழாரம்

**கோவை**

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பில், 'எப்போ வருவாரோ' ஆன்மிக சொற்பொழிவு கோவை கிக்கானி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தினசரி மாலை 6 மணிக்கு நடைபெற்று வருகிறது. முதல் நாள் நிகழ்வில், அருளாளர் ராமானுஜர் குறித்து, ஆன்மிக சொற்பொழிவாளர் பாரதி பாஸ்கர் பேசியதாவது:



கோவையில் நடைபெற்ற 'எப்போ வருவாரோ' ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சியில் அருள்வளர் செம்மல் விருது பெற்ற விருதாளர்களுடன் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் கிருஷ்ணன், பேச்சாளர்கள் பாரதிபாஸ்கர், மரபின் மைந்தன் முத்தையா உள்ளிட்டோர்.

தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும் தொண்டு செய்வதன் மூலம் அன்பையும், சமத்துவத்தையும், பக்தியையும் இந்த மண்ணில் செழிக்கச் செய்வதற்காக ராமானுஜர் வந்த நாள் சரித்திரத்தில் பொன் நாள் ஆகும். எதுவும் நம்மில் இருந்து வருவது அல்ல. நம் மூலமாக வெளிப்படுவது தான். யாரை எதற்காக கருவியாக பயன்படுத்த வேண்டும் என்பது அந்த பரம் பொருளுக்கு தெரியும்.

அவரின் ஆணையால் நாம் பேசுகிறோம், பாடுகிறோம், நம் வேலையை செய்கிறோம். நம்மை எந்த இடத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கடவுளுக்குத் தெரியும். அந்த கடவுளை நம்பி தன் வேலைகளை செய்பவர்கள் பெரும் பெருமைகள் கிடைத்தபோது மகிழ்வதும் இல்லை. அந்த பெருமைகள் கிடைக்காதபோது வருந்துவதும் இல்லை. இது எனக்கு கொடுக்கப்பட்டது, இது எனக்கு விதிக்கப்பட்டது என்று நிற்கிறவர்கள்தான் வாழ்க்கையில் உண்மையான நிம்மதியை அனுபவிப்பவர்கள்.

ராமானுஜர் 1017-வது ஆண்டில் பிறந்து 120 ஆண்டுகள் வாழ்ந்த மகான் அவர். அவரைப் பற்றி பேசும்போது 3 விரல்கள், 3 தவறுகள், 3 ஆசிரியர்கள், 3 மாணவர்கள், 3 பெரும் செயல்கள், 3 தத்துவங்கள் ஆகியவற்றை பற்றி நாம் பேசுகிறோம்.

வைணவ பாரம்பரியத்தில் ஆச்சார்யார்களை வரிசைப் படுத்தும்போது மாலையை போல் வடிவமைப்பார்கள். இந்த மாலையின் மையத்தின் மீது இருப்பது திருமால். மாலையின் கீழ் பதக்கம் போல் ராமானுஜரை வைணவப் பரம்பரை வைத்திருந்தது. பெருமாளுக்கு நேராக அந்த மாலையை தாங்கும் இடத்தில் ராமானுஜரை வைணவப் பரம்பரை வைத்திருந்தது. ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த அவர் காஞ்சிபுரத்தில் குடிபெயர்ந்து வாழ்ந்தார். ஆளவந்தாரால் அடையாளம் காணப்பட்டவர். ராமானுஜரை கண்டதும் நம் மண்ணின் அன்பும், சமத்துவமும், அருளும் என்றென்றும் வாழும் என்ற நம்பிக்கை ஆளவந்தாருக்கு இருந்தது. இவ்வாறு அவர் பேசினார்.

**TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**

காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்)
இமெயில் : tech_services@tnpl.co.in

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

| ஒப்பந்தப்புள்ளி எண். | பணியின் விவரம் | TNPL & NIC இணையதளங்களில் ஒப்பந்த ஆவணம் பதிவேற்றப்படும் நாள் | கடைசி நாள் |
|---|---|---|---|
| 242513 005436 | TNPL - யூனிட் - 1ல், காப்பியர் கட் பேக் லைன் ASRS, மேலுறை இயந்திரங்கள் மற்றும் இறுதிநிலைக் கூடத்திலுள்ள இயந்திரங்கள் மார்க்கெட்டிங் கிடங்கு மற்றும் மாயனூர் ஆலை கோர் மேக்கிங் ஆகியவற்றைப் பராமரித்தல் | 07.01.2025 | 21.01.2025 |
| 242513 005437 | TNPL - யூனிட் - 1ல், Diesel-லில் இயங்கும் Splitter-ரைப் பயன்படுத்தி பெரிய மரக் கட்டைகளை பிளத்தல் மற்றும் Chipper-க்கு வழங்குதல் | 03.01.2025 | 18.01.2025 |
| 242513 005438 | ஆலை வளாகத்திற்குள் உள்ள மரச் சில்லுகளை சுமையேற்றுதல் மற்றும் இடமாற்றுதல் | 03.01.2025 | 18.01.2025 |

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை TNPL மற்றும் NIC இணையதளங்களில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் & நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளிக் கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை **www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app** இணையதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்,

செ.ம.தொ.இ / 1 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
**அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில்,**
**ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர் மற்றும் வட்டம், விருதுநகர் மாவட்டம்**

**மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை) ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் : 2/2024 / நாள்.02.01.2025**

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர் மற்றும் வட்டம், அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில், செயல் அலுவலர் அவர்களால் கீழ்க்காணும் விபரப்படியான பணிக்கு இரு உறையிட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 03.01.2025 முதல் 21.01.2025 வரை தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளமான www.tenders.tn.gov.in மூலம் கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் 21.01.2025 அன்று முற்பகல் 11.30 மணி வரை சமர்ப்பிக்கலாம். பெறப்பட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் 21.01.2025 அன்று மாலை 3.30 மணிக்கு www.tenders.tn.gov.in வலைதளத்தில் திறக்கப்படும். முக்கிய விபரங்கள் மற்றும் திருத்திய விபரங்களை www.tenders.tn.gov.in இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | பணிக் காலம் | ஒப்பந்ததாரர் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணி | 6,89,38,635/– | 3,55,000/– | 18 மாதங்கள் | தமிழ்நாடு அரசுத்துறை / அரசு நிறுவனங்களில் பதிவு பெற்ற நடப்பில் உள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் |

செமாதொ/5744/ஒப்பந்தப்புள்ளி/2024 — செயல் அலுவலர்

தமிழ்நாடு அரசு
**பழங்குடியினர் நலத்துறை**

**செயல்பாட்டு ஆதரவு குழு**
**(RFP No.02/2024)**

பழங்குடியினர் நலத்துறையின் கல்வி முன்னேற்ற திட்டங்களை செயல்படுத்தவும், கண்காணிக்கவும், தகுதியான நிறுவனங்களிடமிருந்து செயல்பாட்டு ஆதரவு குழு (Functional Support Group) அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்கள் **tntenders.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்.044–28516689**
**(அலுவலக வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை)**
**ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் : 17.01.2025**

செ.ம.தொ.இ./11/ஒப்பந்தப்புள்ளி/2025 — பழங்குடியினர் நல இயக்குநர்

## குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையோரம் குட்டியுடன் சுற்றித்திரியும் காட்டு யானைகள்

**குன்னூர்**

நீலகிரி மாவட்டம் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழையால், வனப்பகுதிகள் பசுமையாக காணப்படுகின்றன. கோரைபுற்கள், பழங்கள் அதிக அளவில் மலைப்பாதையில் உள்ளதால், சமவெளி பகுதிகளில் இருந்து குட்டியுடன் 7 காட்டு யானைகள் முகாமிட்டுள்ளன. தற்போது, குன்னூர் - மேட்டுப்பாளையம் சாலை மரப்பாலம் அருகே சாலையோர பகுதிகளில் முகாமிட்டுள்ளன. குட்டியுடன் வலம் வரும் யானை கூட்டம் சாலைக்கு வரும் என்பதால், வனத்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

எனவே, பாதயாத்திரையாக பழநிக்கு செல்லும் முருக பக்தர்கள் வனப் பகுதிக்குள் செல்லக்கூடாது, சுற்றுலா பயணிகள் புகைப்படம், செல்ஃபி எடுக்கக் கூடாது என்று தடை விதித்துள்ளதுடன், மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**வரி விளம்பரங்கள்**

**ஆட்கள் தேவை**

**வீட்டுவேலை**

ஹோம் நர்ஸ், சமையல், வீட்டு வேலைக்கு ஆட்கள் உடனே தரப்படும். ஆட்கள் தேவை. ஸ்ரீலட்சுமி ஹோம்கேர், கோவை. 99445-60080

**ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்** (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்) பதிவு அலுவலகம்: தி ஃபேர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

**மின்-ஏலம் அறிவிப்பு**

**2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.**

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | கடன் கணக்கு எண். | உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர் | 13-2 அறிவிப்பு நாள் | சுவாதீன நாள் | 30.12.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை | சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம் | ரிசர்வ் தொகை INR-ல் | முன்வைப்பு தொகை (EMD) INR-ல் | மின்-ஏலம் நாள் மற்றும் நேரம் | ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4655942000013O | 1) திருமதி. ரோஸ்லின் நமச்சிவாயம், க/பெ. நமச்சிவாயம், 2) திரு. நமச்சிவாயம், த/பெ. தம்பகாய் | 04.09.2024 | 16.11.2024 | ரூ.7,48,867.80 (ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பத்தி எட்டாயிரத்து எண்ணூற்றி அறுபத்தி ஏழு மற்றும் பைசா எண்பது மட்டும்) | 13.01.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை | ரூ.17,43,100/- (ரூபாய் பதினெழு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து நூறு மட்டும்) | ரூ.1,74,400/- (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து நானூறு மட்டும்) | 20.01.2025 @ 03.00 PM | 18.01.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009. |

**சொத்தின் அட்டவணை:** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, சமதூர் கிராமம், எஸ்.எப்.எண். 113/1A1, DTCP ஒப்புதல் எண். 376/219, ஸ்ரீ மகாலட்சுமி நகர், மனை எண்.19, பரப்பு 1590 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் பின்வரும் **எல்லைகள்: கிழக்கு:** அம்பாள் நகர் லேஅவுட், **மேற்கு:** 30 அடி அகல தெற்கு வடக்கு லேஅவுட் தார்சாலை, **தெற்கு:** பார்க் சைட், **வடக்கு:** மனை எண்.18. **அளவுகள்:** வடக்கு பக்கம் கிழக்கு மேற்கு 66 1/4 அடி, கிழக்கு பக்கம் தெற்கு வடக்கு 24 அடி, மேற்கு பக்கம் தெற்கு வடக்கு 24 அடி, தெற்கு பக்கம் கிழக்கு மேற்கு 66 1/4 அடி மற்றும் அனைத்து மற்ற வழக்கமான உரிமைகள்.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.**

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலில் P, (மொபைல் எண். 9884474084), திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849) & திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653)** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

**நாள் : 03.01.2025, இடம் : பொள்ளாச்சி** — **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).